செ.வெ.எண்: 80 நாள்: 01.11.2021

## பத்திரிக்கை செய்தி

**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் மூலம் 2021-ஆம் ஆண்டிற்கான கீழ்கண்ட 7 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளது.**

**சுய தொழில் புரியும் மாற்றுத்திறனாளிகள்** (கை, கால் பாதிக்கப்பட்டோர், செவித்திறன் பாதிக்கப்பட்டோர், மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் குணமடைந்தோர்), **சிறந்த ஆசிரியர்கள்** (பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோர்க்கு கற்பித்தல், செவித்திறன் பாதிக்கப்பட்டோர்க்கு கற்பித்தல், மனவளர்ச்சி குன்றியோர்க்கு பாதிக்கப்பட்டோர்க்கு கற்பித்தல்) **சிறந்த சமூகபணியாளர் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த தொண்டு நிறுவனம் மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்** (செவித்திறன் குறைந்தோர்க்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர், மனவளர்ச்சி குன்றியோர்க்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்)

**மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுனர் மற்றும் நடத்துநர்.**

மேற்கண்ட 7 பிரிவுகளில் கீழ் தகுதியுடைய நபர்கள் / நிறுவனங்கள் விண்ணப்பங்களை www.scd.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விணணப்பங்களை இணைப்புகளுடன் 05.11.2021 அன்று மதியம் 4.00 மணிக்குள் மாவட்ட ஆட்சியரக அலுவலக வளாகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பித்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**